சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : MCOP:68/2020

2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16ம் நாள் எதிர்மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எம்.ரைஹானா பேகம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் சக்திவாணி (RW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>1வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

16.12.2022

இந்த வழக்கில் இறந்துபோன இந்திரா என் உறவினர் என்றால் சரிதான். மனுதார்களும் என் உறவினர் என்றால் சரிதான். நானும் இந்திராவும் 1வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான பணையில் வேலை பார்த்தோம் என்றால் சரிதான். 1வது எதிர்மனுதாருக்கு சொந்த வாகனத்தில் புல்கட்டு ஏற்றும்போது காலி தவறி விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த வாகனம் பின்நோக்கி வந்து மேலே ஏறியதால் காயம் ஏற்பட்டது. அந்த காயத்திற்கு முறையான சிகிச்சை அளிக்காததால் இறந்துபோனார் என்றால் ச ரியல்ல. நான் சொன்னது போல் விபத்து ஏற்பட்டிருந்தால் ஒட்டுநர் பெயர் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றும் அவ்வாறு நடக்காத காரணத்தினால் தான் ஓட்டுநர் பெயர் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஓட்டுநர் பெயர் கணேசன். நான் சொன்னது போல் சம்பவம் நடந்திருந்தால் அன்றே புகார் கொடுத்திருப்பார்கள் என்றும் அப்படி ஒரு சம்பவம் நடக்காத காரணத்தினால் தான் 10 நாட்கள் கழித்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் அந்த புகாரில் வாகனத்தை ஒட்டியது யார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லைஎ ன்றால்

சரியல்ல. மனுதாரர் என் உறவினர் என்பதால் அவருக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ச ரியல்ல.

**<u>2 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்த தேதி தெரியுமா என்றால் 2 வருடங்களுக்கு முன்பு தேதி மறந்துவிட்டது. விபத்து நடந்திலிருந்து எத்தனை நாட்கள் கழித்து காயம்பட்டவர் இறந்துபோனார் என்றால் 10–15 கழித்து இறந்துபோனார். 15.10.2020 தேதி அன்று இறந்துபோனார் என்றால் சரிதான். காயம்பட்டவர் இறந்த பிறகு பிரேத பரிசோதனை நடந்ததா என்று எனக்கு தெரியாது. விபத்தினால் இறந்துபோனவருக்கு வலது முழங்காலில் கீழ் பகுதியில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். வலது கையில் ரத்த காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். சரியான முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தால் காயம்பட்டவர் இறந்துபோயிருக்க மாட்டார் என்றால் சரியல்ல. சிகிச்சை அளித்த மருத்துவரை அழைத்து விசாரித்தால் தான் இறப்பிற்காக காரணம் தெரியவரும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ஏற்பட்ட காயங்களினால் இறப்பு ஏற்படவில்லை சரியல்ல. 2 வது எதிர்மனுதாரர் பொறுத்து மனுதள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. சரியான முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தால் காயம்பட்டவர் இறந்துபோயிருக்க மாட்டார் என்றால் சரியல்ல. காயம்பட்டவரின் இறந்துபோனவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் 2 வது எதிர்மனுதாரர் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் ச ரியல்ல.

மறுவிசாரணை இல்லை.